தினமலர்
கோயம்புத்தூர் | புதன் | 15.7.2026

# மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பின் பொதுக்குழு




■ வேளாண் பல்கலையில் நடந்த மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பு பொதுக்குழுவில், ஆராய்ச்சியாளர்களுக்கு திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் செல்வராஜன் விருது வழங்கினார்.

**வடவள்ளி, ஜூலை 15–**

இந்தியாவின் மிகப் பழமையான வேளாண் மாணவர் அமைப்பான மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பின் 115வது ஆண்டு விழா மற்றும் பொதுக்குழுக் கூட்டம், தமிழ்நாடு வேளாண் பல்கலை அண்ணா அரங்கில் நேற்று நடந்தது.

விழாவுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலை செயல் துணைவேந்தர் சுப்ரமணியன் தலைமை வகித்து பேசுகையில், "வேளாண் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு, இந்த அமைப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளை செய்துள்ளது. 115 ஆண்டுகளாக மாணவர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் வேளாண் வல்லுநர்களை ஒருங்கிணைத்து செயல்பட்டு வேளாண் வளர்ச்சிக்கு பங்காற்றி வருகிறது," என்றார்.

நாட்டின் வேளாண் வளர்ச்சிக்காக சிறப்பான பங்களிப்பை வழங்கிய அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புதுமையாளர்கள் மற்றும் வேளாண் முன்னோடிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. பல்கலையில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.